ISO-14001 : 2004

287

**நாமக்கல் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.கா.சென்னுகிருஷ்ணன், எம்.ஏ.,**

**தொ.மு..எண்.7349/2023/எப்1,** **நாள்:14.02.2024.**

**பொருள் :** மனைப்பிரிவு – நாமக்கல் நகராட்சி – பெரியப்பட்டி கிராமம் – சர்வே எண்.45/63, 46/3B1A6A,3B2–இல் 0.651/2 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு – இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

**பார்வை :**
1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.NKL/ A2MBUIBD/16462/2023/TCP, நாள்.18.11.2023.
2. திரு.எம்.கந்தசாமி மற்றும் மூவர், பரமத்தி வேலூர், நாமக்கல் என்போரின் விண்ணப்பம். நாள்.30.11.2023.
3. நகராட்சிப் பொறியாளர், நாமக்கல் அவர்களின் குறிப்பு. நாள். 12.12.2023.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு கடிதம். நாள்.29.12.2023.
5. நகர்மன்ற தீர்மானம் எண்.716, நாள்.29.12.2023.

******

**உத்திரவு :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம், சர்வே எண்.45/63, 46/3B1A6A,3B2–இல் 0.651/2 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி பார்வை 2இல் காணும் தங்களது விண்ணப்பத்துடன் பார்வை–1இல் கண்டுள்ள நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவில் மேற்படி மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்வை–3இல் கண்டுள்ள நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பில் மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் பகிர்மான குழாய் வசதி, தெருவிளக்கு வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

மேலும், பார்வை 1, 4–இல் கண்டுள்ள செயல்முறைகளின் நிபந்தனைகள் மற்றும் அறிவிப்பு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி 3% சந்தை மதிப்பு ரூ.6,53,400/–, மனைப்பிரிவு கட்டணம் ரூ.20,000/–, கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.1,000/–மனைப்பிரிவு அபிவிருத்தி கட்டணம் ரூ.10,000/– உள்ளிட்ட கட்டணங்கள் 06.02.2024, 09.02.2024 ஆகிய தேதிகளில் நகராட்சி கருவூலத்தில்

செலுத்தப்பட்டுள்ளது (இரசீது எண்.051/01/6/23–24/0005138, 051/01/6/23–24/0005139, 051/01/6/23–24/0005140, 051/01/6/23–24/0005141, 051/01/1/23–24/0048744, நாள்.06.02.2024 மற்றும் 051/01/1/23–24/0048745, நாள்.06.02.2024, நாள்.09.02.2024). மேலும், பார்வை–5ல் கண்டுள்ள நகர்மன்ற தீர்மானத்தில் நகராட்சி பராமரிப்பிற்கு சாலைகள், வடிகால் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளவும், இறுதி ஒப்புதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. சாலைகள் பொது ஒதுக்கீடு இடங்கள் இந்நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண்.5422/2023–இன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை–1இல் கண்டுள்ள உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் செயல்முறைகளில் மனைப்பிரிவிற்கு SWP/DTCP/NAMAKKAL/ LAYOUT NO.364/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பார்வை–1இல் கண்டுள்ள செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள், பொது நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு பார்வை–5இல் கண்டுள்ள நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி.

**இணைப்பு** : 1. மனை உட்பிரிவு வரைபடம்.
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்.

**பெறுநர்:**

திரு.எம்.கந்தசாமி மற்றும் மூவர்,
6/166ஏ,குமாரசாமிபாளையம்,
பெரியசோளிபாளையம், பரமத்தி வேலூர், நாமக்கல்–637204.

**நகல் :**

1. உதவிப் பொறியாளர், நாமக்கல் நகராட்சி – பொது உபயோக இடம் மற்றும் சாலைகளை, சாலைப்பதிவேட்டில் பதிவு செய்யவும் மற்றும் பராமரிப்பு செய்யும் பொருட்டு.
2. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை அலுவலகம், நாமக்கல்– அவர்களின் தகவலுக்கு.
3. வருவாய் ஆய்வாளர், நாமக்கல் நகராட்சி – காலி மனைகளின் மீது வரி விதிப்பு செய்யும் பொருட்டு.
4. வட்டாட்சியர், நாமக்கல்(ஒப்படைப்பு செய்யப்பட்ட மனைப்பிரிவு சாலை இடத்தினை நகராட்சி ஆணையர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ள)
5. நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வர், நாமக்கல் நகராட்சி.